# நிலையில்லா வாழ்வு




இன்றைய உலக கால கட்டத்தில் எதுவுமே நிலையில்லை. பொதுவாக பணம், பொருள் போன்றவைதான் நிலையில்லா தன்மையுடையதாய் இம்மட்டும் மனித வாழ்வில் காணப்பட்டது. ஆனால் இன்று மனித மனமே நிலையற்றதாய் உள்ளது. ஒரு மனிதனின் மனம் எந்நேரம் எவ்விதமாய் மாறும், எவ்விதமாய் சிந்திக்கும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. பார்வைக்கு நல்லவராய் காணப்படுவோர், பயங்கரமான, படுபாதக செயல்களை செய்துவிடுவதை காண்கிறோம். தன் அற்ப சந்தோஷத்திற்காக தான் பெற்ற பிள்ளைகளையே கொன்று விடும் படுபாதக செயல்களை சிலர் தீடீரென்று செய்து விடுவதை காண்கிறோம். படித்தவர்கள், படிக்காதவர்கள், செல்வம் உடையவர்கள், அது இல்லாதோர், ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர் என்ற எந்த பாகுபாடும் இல்லாமல் சிலர் செய்யும் செயல்கள், இவர்களா இப்படி நடந்தார்கள் என்று நம்மை வேதனைபட வைக்கிறது. இவர்கள் செய்யும் தீஞ்செயல்கள் எல்லாம் ஏதோ கோபத்தில் அவசரப்பட்டு செய்தவை அல்ல, நன்கு திட்டமிட்டு தன் நெஞ்சில் உள்ள நஞ்சை வெளிப்படுத்தி செய்தவைகள்.

இதில், மேலும் ஒரு துக்ககரமான காரியம் என்னவென்றால், விசுவாசத்தில், திருச்சபை ஐக்கியத்தில், இதற்கும் மேலாக தேவ ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்தி கொண்டுள்ள சிலர் செய்த செயல்கள், நம்மை இனி யாரை தான் நம்பி இப்பூமியில் வாழ்வது என்று எண்ண தோன்றுகிறது. எந்த இடமும், எந்த சூழ்நிலையும், எந்த மனிதரும் நமக்கு பாதுகாப்பு இல்லை என்ற சூழ்நிலையே நமக்கு இன்று உருவாகியுள்ளது.

ஒருபுறம் அநேகர் இரட்சிக்கபடுவது, அநேகர் தேவ வார்த்தையை கேட்டு ஆண்டவருக்குள்ளாய் வருவது போன்ற காரியங்கள் நடைபெற்றுவந்தாலும், இன்றைய சமூக சூழ்நிலையில் ஒருவரும் நம்பபட தக்கவர்களாய் இல்லை.

ஏனெனில் வெளி தோற்றத்திற்கு பலர் நல்லவர்களாய் காணப்பட்டாலும், அவர்கள் இருதயம் எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதை நம்மால் கணிக்க முடிவதில்லை. ஆரம்பத்தில் அருமையாய் ஊழியத்தை தொடங்கின பலர், இன்று சபையை, தேவ பிள்ளைகளை வஞ்சிக்கிற, வஞ்சகர்களாய் மாறிபோனதை கண்டு நாம் கலங்கி நிற்கிறோம்.

அதே நேரத்தில் தேவ பக்தியை, ஆதாய தொழிலாக கொண்டு வாழும் ஒரு பெருங்கூட்டம் இக்கால கட்டத்தில் ஏழும்பியிருக்கிறது. உலகபிரகாரமான சமூக சூழ்நிலையில்தான் ஒரு நம்பகதன்மை, நிலைதன்மை இல்லையே என்று எண்ணின காலம் போய், திருச்சபை ஐக்கியத்திற்குள்ளாய் தேவ ஊழியர்கள் / விசுவாசிகள் என்று தங்களை அடையாளப்படுத்தி கொள்வோரையே நம்பி நம்மால் ஜீவிக்கமுடியவில்லை. இவை எல்லாம் ஒன்றை நோக்கியே செல்கிறது. அது கிருபையின் காலத்தின் முடிவாகிய இவ்வுலகத்தின் முடிவு. ஆம், இனி காலம் செல்லாது, மனுஷருடைய அக்கிரமம் பூமியில் நிரம்பி வழிகிறது. மனிதர்கள் தாம் தம்மையும் அழித்து கொண்டு, மற்றவர்களையும் அழித்து வருகின்றனர்.

ஒரு பக்கம், மக்களிடையே / தேசங்களிடையே சகோதரத்துவம், ஒற்றுமை, சகிப்புத்தன்மை ஆகிய இவை பேசப்பட்டாலும், பிரிவினை வாதிகளால் மனிதர்கள் பிரிதாளப்பட்டு வருகின்றனர். மனித உயிர்களுக்கு ஒரு மதிப்பும் இல்லாமல் போகிறது. கடந்த ஈஸ்டர் நாளன்று இலங்கையில் நடைபெற்ற வெடிகுண்டு சம்பவமே, இதற்கு ஒரு நல்ல உதாரணம். இவை எல்லாம் இனியும் தேவ பிள்ளைகள், இப்பூமியில் மெய்யான சமாதானத்தோடு, ஐக்கியத்தோடு வாழ முடியுமா என்பதை கேள்வி குறியாக்கியிருக்கிறது. ஆண்டவர் வந்து நம்மை இப்பூமியில் இருந்து எடுத்துகொள்ள போவது அதிசீக்கிரம் நடைபெற போகிறது என்பதற்கு இவை எல்லாம் அத்தாட்சியாயிருக்கிறது. பொய்யான சமாதானமும், பொய்யான செழிப்பும், பொய்யான பாதுகாப்புமே இப்பூமியின் தலைவர்களால் பேசப்படுகிறது. குறிப்பாக நம் இந்திய தேசத்திலேயே கடந்த 6 மாதங்களாய் நடைபெற்று வரும் காரியங்கள், நம் தேசம் சமூக, பொருளாதார அழிவிற்குள்ளாய் சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

எனவே நாம் இப்பொழுது செய்ய வேண்டியது என்ன. அது மிக சுலபம். மணவாளனுக்காக தீவட்டிகளோடு காத்திருந்த கண்ணியர்கள் போல **(மத் 25:1)**, நாம் வேறு எதையும், எவரையும் சாராமல், நம் இரட்சகரான மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை மாத்திரமே சார்ந்து இருக்க வேண்டும். இவ்வுலகத்தில் நாம் எத்தனை காரியங்களை சாதித்தாலும், நாம் எத்தனை பொருள்களை நமக்கென்று சேர்த்து வைத்துக்கொண்டாலும், இன்னும் எத்தனை காரியங்களை அடைய / சாதிக்க நாம் முயன்று கொண்டிருந்தாலும், ஆண்டவர் வந்தால், நொடி பொழுதில் இவை எல்லாவற்றையும் விட்டு செல்ல நம் மனம் ஆயத்தமாய் இருக்க வேண்டும். இல்லையேல் லோத்துவின் மனைவியிற்கு ஏற்பட்ட நிலைதான் நமக்கும் நேரிடும். எனவே ஆண்டவர் வரும்வரை, இவ்வுலகில் நாம் வாழும் ஒவ்வொரு நாளும் தேவ பாதுகாப்பையும், அவருடைய வழிநடத்துதல்களையும் பெற்று வாழ முற்பட வேண்டும். பொல்லாங்காய் தோன்றுகிற எந்த ஒரு காரியத்தையும் விட்டு விலகியிருக்க வேண்டும்.

மணவாளனை வரவேற்று, அவரோடு கலியாண வீட்டிற்குள் செல்ல வேண்டிய **(மத் 25:10)** இந்த கடைசி கால கட்டத்தில், நாம் சற்றேனும் அசதியாய் இருத்தல் கூடாது. நாம் வாழ்கிற இன்றைய வாழ்வு நிலையற்றதாய் இருந்தாலும், இந்த நிலையற்ற வாழ்வில் நாம் வாழும் வாழ்க்கையே நம் நிலையான நித்திய வாழ்விற்கு அடித்தளம் என்பதை மறவாமல் ஜாக்கிரதையாய் வாழ்வோமாக. ஆமென், அல்லேலூயா.